

# தேவனின் நாமம்

இஸ்ரவேலின் தேவன் தமது குணாதிசியங்களை (நிலைகளை) வெளிப்படுத்துவதற்கு, பல நாமங்களை பயன்படுத்தியுள்ளார் என்பதை வேதத்தில் வாசிக்க முடியும். மனுஷரின் சூழ்நிலைகளுக்கு தகுந்தாற் போல,தேவன் தமது அன்பின் பரம இரகசியத்தை திருவுளம் பற்றியுள்ளார். ஆனாலும், அவர், 'இருக்கிறவராகவே இருக்கின்றார்'.

### இது எப்படியாகும்?

பூமியிலே மனுஷருக்கு எத்தனையோ தேவைகள் உள்ளது.

- நோயிலிருந்து விடுதலை
- பேயிடமிருந்து விடுதலை
- கெட்ட பாவ பழக்கங்களிலிருந்து விடுதலை
- எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு
- வாழ்க்கையிலே சமாதானம்
- ஆத்தும பரிசுத்தம்
- ஆசிர்வாதமான வாழ்க்கை

இப்படி பல தேவைகள் நம் வாழ்க்கையிலே உண்டு.

அதரிசனமான தேவன், தம்மை வெளிப்படுத்த (state நிலை: point of view, decision, stand), கீழ் வரும் பல நாமங்களை பயன்படுத்தியுள்ளார்:

**யெகோவா** - இருக்கிறவராகவே இருக்கின்றார்

**யெகோவாயீரே** - எல்லாம் பார்த்துக்கொள்வார்

**யெகோவாநிசி** - எங்கள் ஜெயக்கொடி

**யெகோவாஷம்மா** - எம்மோடிருப்பவர்

**யெகோவாஷாலோம்** - சமாதானமானவர்

**யெகோவாடிஸிகனு** - நீதியானவர்

**யெகோவாமெக்கடிஸ்** - பரிசுத்தம் செய்பவர்

**யெகோவாஓசேனு** - எம்மை படைத்தவர்

**யெகோவாரூபா** - நல்ல மேய்ப்பர்

**எல்ரோஹி** - எம்மை காண்பவர்

**எல்ஷடாய்** - சர்வ வல்லமையுள்ளவர்

**எபினேசர்** - உதவி செய்பவர்

**இம்மானுவேல்** - மனுஷரின் மத்தியில் வாசம் செய்பவர்

எபிரெயர் 1:1, 2 ல் இப்படி வாசிக்கின்றோம்.

'பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப்பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன் (revealed part by part His nature of love), இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார்' (God disclosed totally Himself in Christ Jesus).

தேவன் தமது வாசஸ்தலத்திலிருந்து (சீயோன்) இப்படியாக தம்முடைய உண்மை அன்பை, தாம் உருவாக்கிய மனுஷரிடம் பகிர்ந்து கொண்டார். இதனால், துரோகிகளாகிப்போன மனிதர்கள், தேவைப்படும் வேலையில் மாத்திரம் தேவனைத்தேடும், விபசார சந்ததிகளாக மாறிப்போனார்கள் (தேவனுக்கும், உலகத்திற்கும் ஊழியம் செய்யும் நிலை).

கர்த்தரை அறிந்தும், அவர் சொற்படி நடவாதவர்கள் அநேகர் உளர்.

**ஏன்?**

1. ஒரு விபசாரி, பொருளாதர தேவைகளுக்காகத்தான் வேற்று மனுஷனை நாடுகிறாள்; மற்றபடி அவளும் சாதாரண குடும்ப பெண்களைப்போலத்தான் தனது வாழ்க்கையை நடத்துகின்றாள். அதைப்போலத்தான், நம்மில் பலர், கஷ்டங்கள் வரும் போதுமாத்திரம், இயேசுவிடம் ஊக்கமாய் ஜெபிக்கும் பழக்கமுடையவர்களாக இருக்கின்றோம்.

2. விபசாரி தன் புருஷனிடம் அல்ல, அயலானிடம் பொருளாதாரத் தேவைக்காக அல்லது அர்த்தமற்ற ஆசைகளுக்காக, தனது சரீர அன்பை பகிர்ந்து கொள்கிறாள். அப்படியே, உண்மையான தேவனை அறிந்த சந்ததியும், பல நேரங்களில் தங்களது உலக ஆசைகளின் இச்சைகளை நிறைவேற்றுவதற்காக, மாம்சத்தையும், உண்மையான பரிசுத்தமாக்குதலின் பலனாகிய இரட்சிப்பையும், பாவத்திற்கும், அந்நிய தேவர்களின் பக்தி வைராக்கியத்திற்கும் விற்றுப்போடும் கூட்டங்களாக வாழ்கிறார்கள். இவர்களைத்தான், நமது தந்தை இயேசுவானவர் விபசார சந்ததி என்று அழைக்கின்றார்.

இப்படிப்பட்ட பாழும் உலகை திருத்துவதற்கு ஒரே வழி, படைத்தவரே வந்து, தமது எல்லாப்பண்புகளுக்கும் ஆதாரமான, மாறாத அன்பை வெளிப்படுத்துவதே. அதனால், தேவன் தம்மை முழுவதும் வெளிப்படுத்த சித்தம் கொண்டு, ஒரே நாமத்திலே, வானோர், பூதலோத்தார், யாவரும், அந்த நாமத்திலே ஆசிர்வதிக்கப்படும்படியாக, மாம்சமானார்.

**எதற்காக?**

மனுஷன் தேவ மகிமையாக உருவானவன் என்பதை நாம் உணரவேண்டும். தேவ-பர்வதத்திலே, ஆராதனை கூடத்தின் தலைவனாக இருந்தவன், தன்னை தேவனுக்கு சமமாக உயர்த்தும் எண்ணத்துடன், இந்த பூமியிலே சுற்றித்திரிந்து கொண்டு இருக்கிறான். அவனிடமிருந்து தம்முடைய சரீர பிள்ளைகளை காக்கும்படியாக, தேவன் எடுத்தது ஒரே அவதாரம். **அதுதான், இயேசுவாக அவர் இஸ்ரவேல் தேசத்திலே, தாவீதின் வம்சத்திலே தோன்றியது.**

பிதாவாகிய தேவன், தமது குமாரானகிய கிறிஸ்துவுக்குள், அவரது எல்லா குணாதிசியங்களையும், பண்புகளையும், பாசத்தையும், நேசத்தையும், உண்மையையும், நீதியையும், ஞானத்தையும், அறிவையும், கருணையையும், நிலைநிறுத்த எண்ணம் கொண்டார். பரிசுத்த பவுல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக்குறித்து எழுதும்போது, இவர் யாருமே பார்க்கமுடியாத அதரிசமான தேவனின் தற்சுருபம் என்று எழுதுகின்றார் (**கொலோசியர் 1:15**). இது எவ்வளவு வெளிப்படையான உண்மை. ஏனென்றால், கிறிஸ்துவானவர் உலகிலே வாழ்ந்த காலத்திலே, தேவனுடைய எல்லா பண்புகளோடும், பரிசுத்தம் காத்தும், தேவனுக்கு சமமாக இருப்பதை கொள்ளையாடினப்பொருளாக எண்ணாமல், தன்னைத்-தான் தாழ்த்தி, சிலுவைப்பரியந்தம் பிதாவின் சித்தம், தன்னில் நிறைவேற ஒப்புக்-கொடுத்தார். ஆனாலும், தேவனின் உண்மை விளங்கும்படி, உருவாக்கினவர், உருவாக்கி-யவரின் நாமத்தை, தமது நீதியின்படியே உயர்த்தினார். ஆமாம், இயேசுவின் நாமத்திலே, இன்று நாம் எதை தேவனுடைய நீதியின்படி (கர்தருடைய வார்த்தையின்படி), ஜெபத்திலே கேட்டாலும், அதற்கு பிதாவாகிய தேவன் பதிலளிக்கிறவராக இருக்கின்றார். அதுமாத்திர-மல்ல, இயேசு என்ற நாமத்தை, தமது மற்ற எல்லா நாமத்திற்கும் மேலாகவும் வைத்திருக்-கின்றார். இதனால், தமது அனைத்து குணாதிசியங்களையும் மற்றும் பண்புகளையும், தேவன், இயேசு என்ற நாமத்திற்குள் பொதுவுடைமையாக்கிருக்கின்றார். ஆனாலும், நாம் மற்ற நாமங்களில் தேவாதி தேவனை புகழ்வது, தவறு என்று சொல்வதற்கில்லை.

**இது எதைக்காட்டுகின்றது?**

உதாரணமாக தேவன் உருவாக்கிய நம்மையே எடுத்துக்கொள்வோம்; **தேவசாயலை புரிந்து கொள்ளும் வாய்ப்புபெற்றவர்கள் மனுஷர்கள்**; ஏனென்றால், நாம்தான் தேவனுடைய பிள்ளைகள் இந்த பூமியிலே. நம் உடலிலே, கண்கள் (பார்த்தல்), காதுகள் (கேட்டல்), நாவு (சுவைத்தல்), வாய் (பேசுதல்), கால்கள் (நடத்தல்), கைகள் (செய்தல்), மூக்கு (சுவாசித்தல்), இதயம் (காத்தல்), மற்ற உறுப்புகள் (ஜீரணித்தல், வெளியேற்றுதல்) போன்ற பணிகளை செய்கின்றன. ஒவ்வொரு பணியை செய்யும் உறுப்பும் முக்கியமானதுதான்;

இதில் எதுவும் தேவையற்றது என்று சொல்வதற்கில்லை. முழுமையான ஒரு மனிதனை, பங்கிட்டு பார்க்கும் பொழுது, அதிலே அழகு வெளிப்படுமா? சற்றே சிந்திப்போம். மனிதனின் அழகு அவனது பரிபூரணத்திலே நிறைந்திருக்கிறது. அதுபோலவே, தேவனுடைய அழகும், அவருடைய சம்பூரணத்தில் நிறைந்துள்ளது. தேவன் சம்பூரணராக காட்சியளிப்பது, இயேசு என்ற நாமத்திலேதான். அதாவது, அவருடைய எல்லா குணாதிசியங்களையும் மற்றும் பண்புகளையும் இயேசுவின் முலமாக உலகிற்கு வெளிப்படுத்தியிருக்கிறார். வீணாக குழப்பிக்கொள்வது நம்மை விபசாரச்-சந்ததியாக்கிவிடும்.

**அப்படியென்றால் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள தேவனுடைய நாமங்களை வீணானது என்று சொல்லலாமா?**

இல்லையே; தேவனுடைய அன்பே, அவருடைய எல்லாவிதமான நற்கிரியைகளுக்கும் அடிப்படை ஆதாராமாக இருக்கின்றது (வித்து அல்லது மூலம்- seed). அந்த தேவ அன்பாகிய கிறிஸ்துவின் மூலம், தம்மை நமது பரம பிதா வெளிப்படுத்தியது, அவரது மகிமைக்காக. பயங்கர வல்லமையுள்ள தேவன், அற்ப பரதேசிகளான நமக்கு, தம்மை முழுமையாக காண்பிக்க, ஒரு நாமத்தை உலகத்தோற்றத்திற்கு முன்னமே தெரிந்து கொண்டார் என்று பவுலார் கூறுகின்றார். அந்த நாமத்தின் மூலமே நம்மையும் தெரிந்து கொள்கிறார் (இரட்சிக்கின்றார்). தேவன் தமது மற்ற எல்லா நாமங்களுக்கும் மேலாக இயேசுவைக்கொண்டு எல்லாவற்றையும் உருவாக்கினதையும் வேதத்திலே அறிந்து கொள்ளமுடியும்.

நாம் இந்த உலகிலே ஒருவரை அழைக்க வேண்டுமானால், அவரது நாமத்தை (பெயரை) பயன்படுத்துகின்றோம். நம்மை பேர் சொல்லி அழைக்கிறவர் நமது தேவனாகிய கர்த்தர். அப்படிப்பட்ட தேவனை நாம் எப்படி அழைப்பது (தொழுது கொள்வது). தேவன் பேசியபோது முதலில் வெளிப்பட்டது அவரது வார்த்தையே; அதனால் அந்த வார்த்தையை, தமது என்றும் மாறாத அன்பின் அடையாளமான இயேசுவை, கிருபையாக்கினார் பரம பிதா. அப்படியென்றால், இயேசு வேறு தேவன் வேறா; இல்லையே. இயேசுவே தேவன், தேவனே இயேசு. தேவனின் அன்பு, இயேசுவின் உருவத்தில்; அதனால் இயேசுவின் நாமம் தேவனின் ஆராதனையில் மேன்மையான பங்கை பெறுகின்றது. தேவன் இருக்கிறவராகவே இருப்பதால் அவரது காணப்படாத நித்திய வல்லமை, தேவத்துவம், பராக்கிரமம், பயங்கரம், உண்மை, நீதி, மற்றும் பரிசுத்தம் என்பவைகள் எல்லாம், அவரது அன்பிலே உள்ளார்ந்து இருப்பது போல, அவரது எல்லா நாமங்களும் இயேசுயென்ற ஒரே நாமத்திலே அடங்கியுள்ளது. இதில் குழப்பத்திற்கு இடமேயில்லை.

இயேசு என்ற நாமத்தில்:

- நோய்கள் குணமாகும்
- பாவங்கள்/சாபங்கள் நீங்கும்

- ஆசிர்வாதம் பெருகும்
- சத்தியம் நிலைக்கும்
- உண்மை வெளிப்படும்
- நீதி விளங்கும் (நியாய தீர்ப்பு)
- நற்செய்தி அறிவிக்கப்படும் (தேவனுடைய இராஜ்ஜியம்)
- ஆராதனை செலுத்தப்படும்
- ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்
- நித்திய ஜீவனளிக்கப்படும்

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள எல்லா வாக்குத்தத்தங்களும், புதிய ஏற்பாட்டிலே, ஒரே நாமத்திலே புதிய உடன்படிக்கையாயிற்று. இதைத்தேவனுடைய பிள்ளைகள் உணர்ந்து கொள்ளவேண்டும். நாம் துதிகளை செலுத்தும்போது, தேவனுடைய எந்த நாமத்தையும் பயன்படுத்தலாம். உதாரணமாக பார்பதற்கு கண்களை பயண்படுத்தவது போல, கேட்பதற்கு காதுகளை உபயோகிப்பது போல; ஆனால் ஒரு மனுஷனை அழைப்பதற்கு, அவனது முழு உருவத்திற்கும் பாத்திரமான, நாமத்தையே பயன்படுத்த வேண்டும்.

இயேசு என்ற நாமமே, தேவனின் உள்ளான மற்றும் வெளியான, அவரது சாயலின் மொத்த வடிவம். இந்த நாமத்திலே ஏறெடுக்கப்படுகின்ற எல்லா துதியும், கனமும், மகிமையும், உண்மையான தேவனைச்சேரும். இதுவே உண்மையான ஆராதனை.

எனவே, தேவனை அழைக்க இயேசு என்ற நாமமே போதுமானது, மேலானது.



கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக,

அல்லேலுயா.